

# சேனைக்குடியிருப்பு முத்துமாரியம்மன் பெயரில் ஊர்வலக் கும்மி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# என்னுரை

**அன்னைபராசக்தியின் மெய்யடியார்களே!**

உங்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கம். நான் புலவனுமில்லை, கவிஞனுமில்லை, கல்வியைக் கற்றவனுமில்லை, நான் வாயிருந்தும் பேசமுடியாத நிலையில் இருந்தவன். காரணம் திக்குப் பேச்சு அப்படியான எனக்கு 1975ம் ஆண்டு முத்துமாரியம்மன் ஆலய புனருத்தாரண நிதிக்கு நவராத்திரி விழாவிலே பாளை விற்கும் பாக்கியம் கிடைத்தது (குருடனை விழித்துப்பார் என்று சொல்வது போல) ஒலிவாங்கியும் என்கையில் கிடைத்தது. அன்னையை நினைத்து ஆரம்பித்தேன். ஒலிவாங்கி என்பேச்சை வாங்குமுன்னே எனது திக்குப் பேச்சைவாங்கி பக்கத்தில் நில்லாதே போ என்று துரத்திவிட்டு என்மேல் கருணை காட்டிய அன்னை முத்து மாரியின் பெயரில் ஆயிரம் ஆயிரம் பாக்கள் பாடினாலும் அன்னையின் அருளுக்கு ஈடாகாது.

இருந்தும் என்னால் இயன்ற வரை என் அனுபவ அறிவுக்கு எட்டியவரை, அன்னை முத்துமாரியம்மன் பெயரில் பொன்னூஞ்சல், அம்மன் அருட்பாக்கள் ஊர்வலக் கும்மி ஆகிய சிறு நூல்களை உருவாக்கியிருக்கின்றேன். இவைகளில் ஏதும் குற்றம் குறைகள் இருப்பின் கற்றோரும் மற்றோரும் இதில் உள்ள குறைபாடுகளை எனக்கு தெளிவுபடுத்த வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.


இப்படிக்கு

**வைரமுத்து கணேசன்**

கலைமகள் வீதி,

சேனைக்குடியிருப்பு - 02

கல்முனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சேனைக்குடியிருப்பு ஸ்ரீ முத்துமாரி அம்மன் பெயரில்
## ஊர்வலக் கும்மி

01. முன்னவனே எங்கள் மூத்தவனே - கல்வி
முத்திக்கருள் தரும் வித்தகனே
கண்கண்ட கற்பகப் பிள்ளையாரே - உங்கள்
கழலடி என்றும் காப்பாமே

02. அன்னை சரஸ்பதி வாருமம்மா - நித்தம்
ஆசிதமிழ்க் கவி தாருமம்மா
சின்ன மனது நீ வையுமம்மா - எந்தன்
சிந்தையில் வந்து அமருமம்மா

03. ஆலிலைமேல் பள்ளி கொள்பவனே - காக்கும்
அச்சுதனே பச்சை மேனியனே
பாலுக்குள் வெண்ணைபோ லானவனே - என்மேல்
பரிவு கொஞ்சம் நீ காட்டுமையா

04. அன்னையரே முத்து மாரியம்மா - என்னை
அன்போடு சற்று நீ பாருமம்மா
என்னாவில் வந்து அமருமம்மா - நல்ல
ஏற்றதமிழ்க் கவி தாருமம்மா

05. பன்னிருகை கொண்ட வேலவனை - இரு
பக்கமும் மங்கையைக் கொண்டவனே
உன்னிரு பாதமும் நான் பணிந்தேன் - கந்தா
உள்ளத்தில் வந்து அமருமையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. பாடவகையொன்றும் நாறியேன் - அம்மா
பாட்டின் பொருளையும் நானறியேன்
ஆடல் கலையையும் நானறியேன் - அம்மா
ஆடும் திறமையும் நானறியேன்

07. ஊர்வலக் கும்மி நான்பாட - அம்மா
ஊரில் தெருவெல்லாம் நீ பார்க்க
காரிகையே முத்து மாரியம்மா - என்மேல்
கருணை காட்ட நீ வாருமம்மா

08. சர்ப்பமாய் மண்ணில் உலாவிவந்து நித்தம்
தரிசனம் தந்திடும் தாயாரே
நர்மதா மக்களைக் காருமம்மா - என்று
நங்கையரே கும்மி கொட்டுங்கடி

09. ஆலயம் விட்டு வெளிவந்து - அம்மன்
அடியவர் சேமநலமறிய
நால் திசையும் சுற்றிப் பார்ப்பதற்கு - இப்போ
நாயகியாள் உலா வாறாளடி

10. சிங்க வாகனம் மீதமர்ந்து - அம்மன்
சிந்தையில் மக்களைத் தானினைத்து
அங்கயற் கண்ணியும் வாறாளென்று - பெண்ணே
அழகாய்க் கும்மி கொட்டுங்கடி

11. பிள்ளையார் வீதியைத் தான்நாடி - நம்ம
பூத்தமலர்போல் முகத்தழகி
உள்ளத்தில் மகிழ்ச்சிமேலோங்க - இப்போ
ஊர்வலம் வாறாள் பாருங்கடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. குத்து விளக்கேற்றி வையுமடி - பெண்ணே
பூரண கும்பமும் வையுமடி
பத்தினி நாமத்தைக் கூறுமடி - பெண்ணே
பாபம் பறந்திட வேண்டுமென்று

13. ஐங்கரத்தானின் அன்னையடி - நம்மை
ஆளும் சிவசக்தி மாரியடி
எங்கும் நிறைந்த பராபரியாம் - அவள்
எங்களைக் காக்கும் ரட்சகியாம்

14. பிள்ளையார் ஆலய வீதியிலே - இப்போ
பித்தனார் தேவியும் வாறாளென்று
தெள்ளமுதாலே கவிபாடி - நாமும்
தேவியை வரவேற்க வேண்டுமடி

15. முத்துமகனின் நலமறிந்து - தாயார்
முத்தானவார்த்தைகள் தான்பேசி
பூத்த முகத்தோடு வாறாளென்று - இப்போ
பூங்கொடியே கும்மி கொட்டுங்கடி

16. வனவாச வீதியும் தான்பார்த்து - அம்மன்
வரங்கள் பலவும் தான் ஈந்து
மனம் போல வாழுங்கள் என்று சொல்லி - நம்ம
மாதா வருவதைப் பாருங்கடி

17. பேர்பெற்ற மெயின் வீதி தான் தேடி - நம்ம
பேரரசி முத்து மாரியம்மா
நேராக இப்போது வாறாளென்று - பெண்ணே
நிமிர்ந்து கும்மி கொட்டுங்கடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. பட்டினி பஞ்சம் தனையகற்றி - நித்தம்
பாரிலே செல்வம் மிகச் செழிக்கும்
கிட்டங்கிப்பிள்ளையார் வாழ்பதிக்கு - இப்போ
கிருபாதேவியும் வாறாளடி

19. ஆத்தோரம் தென்றல் தாலாட்ட - நல்ல
அழகு பதியில் வீற்றிருக்கும்
மூத்தவன் குசலம் தானறிய - இப்போ
முத்து மாரியும் வாறாளடி

20. செந்தமிழ்ப் பாட்டைச் செவிமடுக்கும் - எங்கள்
செல்வக் கணபதி தனபதிக்கு
வித்தக நாயகி வாறாளென்று - பெண்ணே
விரும்பிக் கும்மி கொட்டுங்கடி

21. ஆங்காரம் கொண்டு சினந்தெழுந்து சக்தி
அசுரர் கூட்டம் தனையழித்த
ஓம்காரி காளியின் வீதியிலே - இப்போ
ஒய்யாரி பவனி வாறாளடி

22. ஆங்கார சக்தி நலமறிந்து - தாயார்
அன்பான வார்த்தையும் தான் பேசி
சிங்காரி விடையும் தான் பெற்று - அம்மன்
திரும்பி வருகிறாள் பாருங்கடி

23. வீரமும் கல்வியும் செல்வமெல்லாம் - நாம்
விரும்பிப் பெற்றிட வேண்டுமென்றால்
ஆரத்தழுவி அடிபணிந்து - அம்மன்
அருளைப் பெற்றிட வாருங்கடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. ஆண்டுக் கொருமுறை நாம் கூடிப் - பெண்ணே
அன்னையின் புகழை நாம்பாடி
வேண்டும் வரம் தனைப் பெற்றிடுவோம் என்று
விரும்பிக் கும்மி கொட்டுங்கடி

25. நாவலர் வீதியைத் தான்நாடி - இப்போ
நாரணி வீதியுலா வாறாள்
ஆவலாய் அன்னை [illegible] - பெண்ணே
ஆனந்தக் கும்மி கொட்டுங்கடி

26. அன்னையரே முத்து மாரியம்மா - எம்மை
அன்போடு கொஞ்சம் நீ பாருமம்மா
பொன்னான நல்வாழ்வு தாருமம்மா - எங்கள்
புந்தியில் வந்து அமருமம்மா

27. மத்திய வீதியைத் தான்தேடி - நம்ம
மாதுரசியுலா வாறாளடி
சுத்தமாய் மனதை வைத்திடுவாய் - அந்த
சுந்தரி நாமத்தைக் கூறிடுவாய்

28. தங்க நிறச் செல்வ நாயகியாம் - நல்ல
தத்துவமுத்துக்கள் சொல்வளாம்
எங்களபிராமி தேடிவாறாள் என்று
ஏந்திழையே கும்மி கொட்டுங்கடி

29. காலில் சிலம்புகள் தாளொலிக்க - அம்மன்
கையில் வளையல்கள் தான் குலுங்க
ஆலிலை வாசனின் தங்கையவள் - இப்போ
அடியவரைத் தேடி வாறாளடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. மாரியம்மன் கோயில் வீதிகண்டு - அம்மன்
மக்கள் மனக்குறை தீர்ப்போமென்றாள்
கோரிக்கை தன்னை நிறைவேற்றும் - என்று
கோதையரே கும்மி கொட்டுங்கடி

31. பாட்டிலுயரிடம் பெற்றிருக்கும் - எங்கள்
பாரதி வீதியைத் தான்தேடி
அட்ஷய லெட்சுமி வாறாளென்று - பெண்ணே
ஆனந்தக் கும்மி கொட்டுங்கடி

32. ஆயகலைகள் அருளவென்று - அம்மன்
அன்போடு மக்களைத் தான்பார்த்து
மாயைகளைந்து இருளகற்ற - நம்ம
மாரி வருவதைப் பாருங்கடி

33. பாரதி வீதியால் தானுமிப்போ - நம்ம
பராசக்தி வருகிறாள் என்று இப்போ
சேரடி எல்லோரும் ஒன்றாக - இன்று
தெய்வ தரிசனம் காண்பதற்கு

34. ஓரடி ஈரடி தூக்கி வைத்து - அம்மன்
ஓய்யாரமான நடை நடந்து
பாரதி வீதியைத் தான் கடந்து - இப்போ
பத்தினி வாறதைப் பாருங்கடி

35. பத்தாண்டுமுடிய காரிருளும் - கண்ணே
கணநேரம் போக்கிடும் சக்தி கொண்ட
முத்து விநாயகர் தன்பதிக்கு - எங்கள்
தேவி முத்துமாரி வாறாளடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. கண்ணுக்குக் கண்ணாக வீற்றிருக்கும் - நம்ம
கற்பகப் பிள்ளையார் தன்பதிக்கு
அன்னை மகமாயி வாறாளென்று - பெண்ணே
ஆனந்தக் கும்மி கொட்டுங்கடி

37. ஒன்பது நாளும் தவமிருந்து - அம்மன்
உகந்து வரமும் பெற்றுக் கொண்டு
அன்போடு ஊர்வலம் வாறாளடி - பெண்ணே
அள்ளி நமக்கு அருள் வழங்க

38. பாடசாலை வீதி தான்தேடி - அம்மன்
பக்தர்கள் பக்கமும் சூழ்ந்துவர
ஆடி அசைந்து வாறாளென்று - பெண்ணே
அழகாய்க் கும்மி கொட்டுங்கடி

39. மத்தளம் மேளமும் தான்முழங்க - பெண்ணே
மங்கள வாத்தியம் தானொலிக்க
பக்தர்கள் பின்னால் புடைசூழ - பரா
சக்தி வருகிறாள் பாருங்கடி

40. மயான வீதியும் தான் கண்டு - மாரி
மக்கள் குறை தீர்க்க வேண்டுமென்று
காயம்பூ மேனியன் தங்கைவாறா ளென்று
காரிகையே கும்மி கொட்டுங்கடி

41. வீதிகள் தோறும் அலங்கரித்துப் - பெண்ணே
வீட்டின் முன்குத்து விளக்கேற்றி
ஆதிபராசக்தி வீற்றிருக்கும் - கும்பம்
அன்னையரே பக்கம் வையுமடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42. வீதிக்கு வீதி வெடியோசை - பெண்ணே
விளக்குகளாலே அலங்காரம்
ஆதிபராசக்தி உன்வரவு - காண
அடியவர் கூட்டமோ ஏராளம்

43. கம்பகாமாட்சி வீதி நாடி - எங்கள்
காரிகை மாரியும் வாறாளடி
அம்பிகை வரவைத் தானறிந்து - பெண்ணே
ஆனந்தக் கும்மி கொட்டுங்கடி

44. காஞ்சி நகரிலே வாழ்ந்து வந்த - எங்கள்
காமாட்சி யம்மன் பதிதேடி
அஞ்சுக மீந்திடும் அன்னைமாரி - இப்போ
அழகான சிங்கத்தில் வாறாளடி

45. பள்ளம் படுகுழிதான் மூடிப் - பெண்ணே
பத்தை பதவலும் வெட்டித் தள்ளி
உள்ளம் போல் வீதி இருக்குதென்று - சொல்லி
உத்தமியை வர வேற்போமடி

46. ஆயிரம் கண்ணுள்ள தேவியவள் - நம்மை
ஆளும் அபிராம வல்லியவள்
பாயிரம் கேட்டு அகமகிழ்வாள் - என்று
பைந்தமிழ்க் கும்மி கொட்டுங்கடி

47. கலைஞானம் வாரி வளங்கவென்று - கண்ணே
கருத்தோடு நாமமும் பெற்றுவிட்ட
கலைமகள் வீதியும் தான்பார்க்க - பெண்ணே
காரிகை வாறதைப் பாருங்கடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

48. கல்லுக்குள் நீராக அவளிருப்பாள் - சிலர்
கற்பனைக் கண்ணுக்கும் நீராவாள்
சொல்லுக்கும் வல்லமை தந்திடுவாள் - என்று
தோகையரே கும்மி கொட்டங்கடி

49. மங்களம் எங்கும் கொழிப்பதற்கும் - பெண்ணே
மக்கள் நிறைமனம் காண்பதற்கும்
பொங்குதமிழ்க்கவி நல்குதற்கும் - அன்னை
பூரித்து இப்போது வாறாளடி

50. சங்கத் தமிழர் குலம் தழைக்க - எங்கள்
சைவம் தழைத்து மேலோங்க
சிங்க வாகனம் மீதமர்ந்து - நம்ம
சிவசக்தி வாறதைப் பாருங்கடி

51. பாரடி பெண்ணே மாரியம்மா - இப்போ
பக்தர் முகம் பார்க்க வேண்டுமம்மா
மாவடி வீதியும் நீ பார்த்து - நல்ல
மங்களம் பொங்கிடச் செய்யுமம்மா

52. செக்கச் சிவந்த நிறத்தழகி - அம்மன்
சிங்காரச் செந்தூரப் பொட்டழகி
மங்கயர் திலகம் வாறாளென்று - பெண்ணே
மகிழ்ந்து கும்மி கொட்டுங்கடி

53. வித்தக நாயகி தாழ்பணிந்து - பெண்ணே
விண்ணப்பம் யாதென நீயுரைத்தால்
புத்திர பாக்கியம் மட்டுமல்ல - நல்ல
பொன்னான வாழ்வெல்லாம் தந்திடுவாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

54. நாலான வேதத்தின் நாயகியாம் - தாயார்
நம்மை ரட்சிக்கும் காரிகையாம்
பிலாவடி வீதியும் தான்பார்க்க - எங்கள்
பித்தனார் தேவி வாறாளடி

55. மாவடி வீதி தான்பார்த்து - முத்து
மாரி அருள் மழைதான் பொழிந்து
மூவடியளந்த கண்ணன் தங்கை - நம்ம
முத்துமிழ்ச் செல்வி வாறாளடி

56. பாதித்தூக்கத்தில் இருக்காமல் - பெண்ணே
பைங்கிளி வரவை நீயறிந்து
துதித்துப் பணிந்து அருள்பெறுவோம் - என்று
தூக்கத்தை விட்டு நீ வாருமடி

57. நஞ்சுண்ட கண்டனின் பாதியவள் - நம்மை
நாடிக் கலந்திடும் தேவியவள்
கொஞ்சிக் குலாவிட வாறாளென்று - பெண்ணே
குனிந்து கும்மி கொட்டுங்கடி

58. சேமன் வீதி வருகுதடி - பெண்ணே
சென்னி மேலே கரம்கூப்புமடி
ஆமைபோல் பொறாமையை நீயடக்கிப் - பெண்ணே
அன்னையின் நாமத்தைக் கூறுமடி

59. உறங்கும் நேரத்தில் ஊர்வலமா - என்று
ஊதாரிப் பேச்சும்நீ பேசாமல்
திறந்த மனத்தோடு வந்துநின்று - பெண்ணே
சீரும் சிறப்பெல்லாம் கேழுமடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60. பாட்டியே தட்டி எழுப்பாதே - நான்
பகல்க்கண்ட காட்சி கனாவருது
ரோட்டெல்லாம் கூட்டிப் பெருக்கிருக்கேன் - என்று
சோம்பேறிப் பேச்சும் நீ பேசாதே

61. பதிவிட்டு சிங்க மீதேறி - பெண்ணே
பக்தர் தமக்கு அருள் விளங்க
மதி முகத்தழகி வாறா ளென்று - இப்போ
மங்கையரே கும்மி கொட்டுங்கடி

62. அன்னையின் நாமத்தைக் கூறுமடி - பெண்ணே
ஆனந்தக் கும்மியும் கொட்டுமடி
என்னையும் கண்ணால் பாருமென்று - சொல்லி
ஏக்கத்தைச் சொல்லி முறையிடடி

63. பேசுக்ச் சிக்கலும் போக்கிடுவாள் - அன்னை
பெரியம்மை சின்னம்மை தள்ளிவைப்பாள்
காச்சல் கண் நோயையும் நீக்கி வைப்பாள் - என்று
கன்னியரே கும்மி கொட்டுங்கடி

64. சின்னச் சின்ன வீதி தான்பார்த்து - அம்மன்
சிரித்துப் பேசி அகமகிழ்ந்து
என்னருள் என்றென்றும் கிட்டுமென்று - சொல்லி
எங்கள் முத்துமாரி வாறாளடி

65. ஆனந்தக் கண்ணீர் தான் கசிய - பெண்ணே
அங்கம் சிலிர்த்து அதிர்வு வர
கூனிக்குறுகி அடிபணிந்து - நம்ம
குறையைச் சொல்லி முறையிடடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

66. ஊர் வீதி யெல்லாம் தான் சுற்றி - பக்தர்
உள்ளமறிந்து வரம் கொடுத்து
பார்போற்ற எல்லோரும் வாழ்கவென்று கூறி
பராசக்தி தன்பதி வந்து விட்டாள்

67. உள்ளத்தில் உதித்ததை நானெடுத்து - தாயே
ஊர்வலக் கும்மியாய் நானுரைத்தேன்
கள்ள மில்லா நெஞ்சு கொண்டவளே - அம்மா
கற்பக வல்லி கண் பாரும்மம்மா

## யுத்தம் செய்யப் போகும் போது (வேறு)

அசுரவதை செய்ய வாறாள்
அன்னை - ஆங்காரம் கொண்டுமே சிங்கமீதேறி
மாசுபடா வெற்றி கொள்ள
இன்று வாளோடு சூலமும் கையேந்தி வாறாள்

கர்ச்சிக்கும் சிங்கத்தில் ஏறி
சக்தி களம் தேடி இப்போது புறப்பட்டு வாறாள்
நிச்சயம் வெற்றிதான் என்று
பல - நிகரற்ற ஆயுதம் கையேந்தி வாறாள்

வஞ்சக நெஞ்சரை அழிக்க
சக்தி - வலுமிக்க ஆயுதம் கையேந்தி வாறாள்
தஞ்சமென வந்தோரைக் காக்க
எங்கள் - தயாபரி மாரியும் சிங்கத்தில் வாறாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலகலென கலகலென சதங்கை ஒலிக்க
அவள் கண்கள் இரண்டிலும் நெருப்புப் பறக்க
உலகெலாம் அதிர்ச்சியால் அதிர
இன்று உத்தமி வருகிறாள் யுத்தம் புரிய

அதர்மத்தின் தலைவனை அழிக்க
அன்னை ஆவேசம் கொண்டுமே அசுரனைத் தேட
பாதகர் இடம் தன்னைப் பார்த்து
எங்கள் - பராசக்தி வருகிறாள் யுத்தம் புரிய

காரிகை களம் தன்னைக் கண்டு
அவள் - கட்டுக் கடங்காத ஆவேசம் கொண்டு
கூரிய வாளையும் உருவி
எங்கள் - கொம்பனை போர்க்களம் தனைத்தேடி வாறாள்

ஓடாதே கொடியவா என்று
சக்தி - உருவிய வாளாலே வெட்டவே போறாள்
சாடியே பல துண்டாய் வெட்டி
அவனை சங்காரம் பண்ணியே இரு கூறாய்ப் போட்டு

அதர்மத்தின் தலைவனே ஒழிக
உன் - ஆணவ மெல்லாமே இத்தோடு அழிக
தர்மத்தின் தலைவனே வருக
இந்தத் - தரணி வாழ் மக்களை எப்போதும் காக்க.

ஆவேசம் அடங்கியே அன்னை
இப்போ - அடியவர் மகிழ்ச்சியைக் கண்டு மகிழ்ந்து
போவோமே ஆலயம் என்று
அன்னை - புறப்பட்டு வருகிறாள் இருப்பிடம் நாடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தம் முடிந்து வரும் போது

வித்தக ரூபி போர்புரிந்து - இன்று
வீரசங்கார வெற்றி கண்டு
சித்தம் குளிர அகமகிழ்ந்து - நம்ம
தேவி வருவதைப் பாருங்கடி

மங்கையரே வந்து பாருங்கடி - இன்று
மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆடுங்கடி
அங்கயற்கண்ணி அடிபணிந்து - அவள்
அருளைப் பெற்றிட வாருங்கடி

சங்கத் தமிழ் மணம் வீசுதடி - பெண்ணே
தாயாரின் வரவைத் தானறிந்து
அங்கம் சிலிர்த்து வருகுதடி - கண்ணே
ஆதிபராசக்தி தன்வரவால்

திங்களொளி போல் முகத்தழகி - அன்னை
சிங்கார செந்தூரப் பொட்டழகி
அங்கம் சிவந்த நிறத்தழகி - அன்னை
ஆடிவருவதைப் பாருமடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்த்தமாடப் போகும் போது

பொங்குகடல் காண வேண்டுமென்று - நம்ம
பூங்கொடி இப்போ ரதமேறி
சங்கத் தமிழ்ப் பாடல் தான்முழங்க - பரா
சக்திபுறப்பட்டு வாறாளடி

தீர்த்தம் திருவிழாக் காண்டே மென்று - பெண்ணே
திரண்டு கூட்டமாய் வாருமடி
பார்த்தாலே பாவம் பறந்துவிடும் - என்று
பாவையரே கும்மி கொட்டுங்கடி

பாஞ்சாலி வந்து குடியிருக்கும் - நம்ம
பாண்டியூர்தனைத் தான்தேடி
அஞ்சுக வல்லி வாறாளென்று - பெண்ணே
ஆனந்தக் கும்மி கொட்டுங்கடி

பாரதப் போரை முடிக்கவென்று - அன்று
பாஞ்சாலன் வேழ்வியில் தானுதித்த
பாரத நாயகி வாழ்பதிக்கு - பரா
சக்தியும் இப்போது வாறாளடி

பாம்பணை வாசனின் சோதரியாம் - பஞ்ச
பாண்டவர் தமக்கு நாயகியாம்
அம்பிகை வாழ்பதிதான் தேடி - இப்போ
அன்னை முத்துமாரி வாறாளடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்த்தமாடித் திரும்பி வரும் போது

வங்கக் கடலிலே நீராடி - அம்மன்
வண்ணப்பட்டாடை தானுடுத்தி
அங்கம் குழிர்ந்து அகமகிழ்ந்து - எங்கள்
அம்பிகை வருகிறாள் பாருங்கடி

திருநீறு சந்தணம் தான் பூசி - அம்மன்
திங்கள் போல் நெற்றியில் பொட்டுமிட்டு
மங்களக் குங்குமம் தான் தரித்து - நம்ம
மாதா வருகிறாள் பாருங்கடி

ஆலயம் வந்து தான் சேர்ந்து - அம்மன்
அழகான பொன்னூஞ்சல் மேலமர்ந்து
பூலோக வல்லி ஆடிடுவாள் - என்று
பூங்கொடியே கும்மி கொட்டுங்கடி

கண்ணான ஊஞ்சல்ப்பா தான்கேட்டு அன்னை
கருணை வளங்கக் காத்திருப்பாள்
அந்நேரம் உள்ளத்தை நீ திறந்து - பெண்ணே
ஆனவரமெல்லாம் கேழுமடி

இல்லை யென்ற சொல்லே இல்லையென்பாள் - அன்னை
ஈந்து எல்லாமும் அளித்திடுவாள்
செல்வமும் மேலோங்கச் செய்திடுவாள் - நம்ம
சிந்தையில் வந்து அமர்ந்திடுவாள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுப்பிரார்த்தனை

| | |
|---|---|
| அன்னை முத்துமாரியரே | ஓம் பராசக்தி |
| ஆதிசிவன் தேவியரே | ஓம் பராசக்தி |
| ஆனைமுகன் தாயல்லவோ | ஓம் பராசக்தி |
| ஆரணங்கே வாருமம்மா | ஓம் பராசக்தி |
| இன்னல்பல தீர்த்துடுவாய் | ஓம் பராசக்தி |
| இரக்கம் எம்மேல் வைத்திடுவாய் | ஓம் பராசக்தி |
| ஈகைக் குணம் கொண்டவளே | ஓம் பராசக்தி |
| இனியதமிழ் நாயகியே | ஓம் பராசக்தி |
| உடையாகத் தோலணிந்த | ஓம் பராசக்தி |
| உருத்திரனில் பாதியல்லோ | ஓம் பராசக்தி |
| ஊர்காக்க வந்தவளே | ஓம் பராசக்தி |
| உத்தமியே மாரிமுத்தே | ஓம் பராசக்தி |
| எங்கள் குலதேவியரே | ஓம் பராசக்தி |
| ஏந்திழையே வாருமம்மா | ஓம் பராசக்தி |
| ஏகலோக நாயகியே | ஓம் பராசக்தி |
| எங்களைக்காருமம்மா | ஓம் பராசக்தி |
| ஐம்பூதம் தனைவெல்ல | ஓம் பராசக்தி |
| ஆனவளி காட்டுமம்மா | ஓம் பராசக்தி |
| ஒளிவிளக்கே பெரும்சுடரே | ஓம் பராசக்தி |
| உளம் நிறைந்த தெய்வமே நீ | ஓம் பராசக்தி |
| ஓங்காரி மாரிமுத்தே | ஓம் பராசக்தி |
| ஓடிவர வேண்டுமம்மா | ஓம் பராசக்தி |
| கலைஞானம் எமக்களிக்கும் | ஓம் பராசக்தி |
| கரிமுகனின் தாயல்லலவோ | ஓம் பராசக்தி |
| காரிருளில் நிலவுவர | ஓம் பராசக்தி |
| கருணையுள்ளம் கொண்டவளே | ஓம் பராசக்தி |
| கிளைபோல் அசுரர்குலம் | ஓம் பராசக்தி |
| கிழேவிளச் சாய்த்தவளே | ஓம் பராசக்தி |
| கீதம் நாதம் மிகவிரும்பும் | ஓம் பராசக்தி |
| கீர்த்திபெற்ற தெய்வமே நீ | ஓம் பராசக்தி |
| குறையாத பெருஞ்செல்வம் | ஓம் பராசக்தி |
| கொடுத்திடுவாய் மனமிரங்கி | ஓம் பராசக்தி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூந்தல் அசைந்தாடினாலும் ஓம் பராசக்தி
கோடையிலும் மழைவருமே ஓம் பராசக்தி
கெடுதிசெய்ய நினைப்பவர்க்கும் ஓம் பராசக்தி
கெடுக்கமனம் வைத்திடாதே ஓம் பராசக்தி
கேசவனார் தங்கையல்லோ ஓம் பராசக்தி
கேட்டவரம் தாருமம்மா ஓம் பராசக்தி
கொஞ்சும் மொழிச் சொல்லழகி ஓம் பராசக்தி
கோதையரே வாருமம்மா ஓம் பராசக்தி
கொலுவிருக்க வேண்டுமென்று ஓம் பராசக்தி
கொம்பனையே இங்கமர்ந்தாய் ஓம் பராசக்தி
சங்கரனார் தேவியரே ஓம் பராசக்தி
சற்றுமனம் வையுமம்மா ஓம் பராசக்தி
சாத்துமலர் தனையேற்கும் ஓம் பராசக்தி
சங்கரியே வாருமம்மா ஓம் பராசக்தி
கைவளையல் தான்குலுங்க ஓம் பராசக்தி
கலகல வாருமம்மா ஓம் பராசக்தி
கையிலைமலை வாசனுக்கு ஓம் பராசக்தி
கண்ணிறைந்த நாயகியே. ஓம் பராசக்தி
மயிலேறும் வாகனர்க்கு ஓம் பராசக்தி
மனமுவந்து வேல்கொடுத்தாய் ஓம் பராசக்தி
மனம்போல வாழ்வளிக்கும் ஓம் பராசக்தி
மாரிமுத்தே வாருமம்மா ஓம் பராசக்தி
இனங்கண்டு வரமருளும் ஓம் பராசக்தி
இங்கிதமே ரஞ்சிதமே ஓம் பராசக்தி
முத்தமிழுக் கதிபதியே ஓம் பராசக்தி
முத்துமாரி அம்மையரே ஓம் பராசக்தி
சிந்தைநிறை தெய்வமே நீ ஓம் பராசக்தி
சிங்காரி மாரிமுத்தே ஓம் பராசக்தி
முத்தான முத்தழகி ஓம் பராசக்தி
முத்துமாரித் தாயாரே ஓம் பராசக்தி
நித்தமுன்னை நினைப்பவர்க்கு ஓம் பராசக்தி
நெஞ்சில்நிறை தெய்வமே நீ ஓம் பராசக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது வெளியீடுகளாக இதுவரை...........

01. சேனைக்குடியிருப்பு முத்துமாரியம்மன் பெயரில் பொன்னூஞ்சல் வைரவர் அகவல்

02. அம்மன் அருட்பாக்கள், ஆதிசிவன் அருட் காவியம்

03. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்பரர் பத்து, மயானப்பத்து

04. சேனைக்குடியிருப்பு முத்து விநாயகர் பெயரில் கண்கொடுத்த கற்பகப்பத்து, திருக்குமரன் வரமருள் பத்து

05. ஆழிப்பேரலையின் அனர்த்தக் காவியம்

06. கதிர்காமக் கந்தன் பெயரில், வளிநடைப் பத்து, வளிநடைக் கும்மி

07. கிட்டங்கிப் பிள்ளையார் பெயரில், பொன்னூஞ்சல்

08. சேனைக்குடியிருப்பு முத்துமாரியம்மன் பெயரில், ஊர்வலக் கும்மி

இவைகளையெல்லாம் நூல்வடிவமாக்க எனக்கு உதவி ஒத்தாசை புரிந்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org